(240)

# கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் அவர்களின் நடவடிக்கைகள்
## முன்னிலை: திரு. இரா.வாழவந்தான்.,பி.இ,
## திட்ட அனுமதி
## நகர் ஊரமைப்புச்சட்டம் **1971** பிரிவு **49-**ன் கீழ்

ந.க.எண். **445/2018**/உ_திகு-3 நாள்: **03.11.2020**

தி.அ.எண். **187/2020**

உள்ளாட்சியின் பெயர்: வெள்ளணைப்பட்டி ஊராட்சி (அன்னூர் வட்டம்)

பொருள் : குடியிருப்பு மனைப்பிரிவு - கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் - கோயம்புத்தூர் மாவட்டம் - அன்னூர் வட்டம் - வெள்ளாணைப்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம் - நில அளவை எண்.194/4, 5, 6, 7, 8, 195/1A1, 1B1, 1C, 196/1A, 1B, 1C, 1D, 1E, 197/2, 3, 4 மற்றும் 197/5B-ல் 10.28 ஏக்கர் பரப்பில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் தொழில்நுட்ப வரைபட ஒப்புதல் வழங்கப்பட்டது - திட்ட அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் கடிதம் ந.க.எண்.9381/2018/TCP/ நாள் .10.07.2020.
2. மனுதாரர் M/s.Value Dream land property , Salem அவர்கள் விண்ணப்பம் நாள்.31.01.2018, 15.06.2020, 09.07.2020.
3. தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), வெள்ளாணைப்பட்டி ஊராட்சி அவர்கள் கடிதம் ந.க.எண்.1/2018, நாள்.06.04.2018, 21.10.2019.
4. உறுப்பினர் செயலர் (பொ), கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமம் கடிதம் எண்.445/2018/உ_திகு3, நாள்.27.04.2018, 29.11.2019.
5. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்கள் சுற்றறிக்கை ந.க.எண்.7978/2012/எல்ஏ2/நாள்.19.04.2012.
6. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்கள் சுற்றறிக்கை ந.க.எண்.13686/2007/எல்ஏ1/நாள்.08.09.2017.
7. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்கள் சுற்றறிக்கை ந.க.எண்.2201/2017/சிபி/நாள்.28.09.2017
8. மனுதாரர் வளர்ச்சி கட்டணம் செலுத்தி விண்ணப்பம் பெறப்பட்டநாள்- 19.10.2020 மற்றும் 27.10.2020
9. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம் தீர்மானம் எண்- 02/2020 நாள்-25.09.2020

*****

உத்தரவு:

பார்வை-1ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் செலாணை கடிதத்தில் கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம் - கோயம்புத்தூர் மாவட்டம் - அன்னூர் வட்டம் - வெள்ளாணைப்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம் - நில அளவை எண்.194/4, 5, 6, 7, 8, 195/1A1, 1B1, 1C, 196/1A, 1B, 1C, 1D, 1E, 197/2, 3, 4 மற்றும் 197/5B-ல் 10.28 ஏக்கர்

பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு ம.வ/ நஊஇ எண்.08 /2020 என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதியும் திட்ட அனுமதி எண்-187/2020 என எண்ணிடப்பட்டு கீழ்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளின்படி திட்ட அனுமதியும் அளிக்கப்படுகிறது.

மனுதாரர் தேவையான உரிமங்களை மற்ற விதிகளின் கீழ் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

## சிறப்பு நிபந்தனை-1

நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்யஉரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறுயாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

## பொது நிபந்தனைகள்

1. இந்த திட்ட அனுமதியானது கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமத்திற்கு உட்பிரிவு 1 மற்றும் 2 பிரிவு 91-A நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 (சட்டம் 35 – 1972)ன் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டதாகும்.
2. பிரிவு 79 நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 (சட்டம் 35–1972)ன் படி எந்த நபராவது இந்த உத்திரவு அல்லது தீர்மானத்தினால் பிரிவு 49 அல்லது 64(1)ன் கீழ்மறுக்கப்பட்டிருப்பின் உத்திரவு அளிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் நகர் ஊரமைப்பு இயக்குநர்/அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம்.
3. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழும உறுப்பினர் செயலர் திட்டஅனுமதி அளித்த பிறகு
   (1) திட்டஅனுமதி பெற தவறான விபரம் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலோ,
   (2) சட்டப்படி சரியான வழிமுறைகள் கடைபிடிக்கத் தவறியிருந்தாலோ,உறுப்பினர் செயலர் மேற்கண்ட காரணத்தின் அடிப்படையில் திட்ட அனுமதியினை மாற்றவோ ரத்து செய்யவோ உரிமையுண்டு.

4. தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் கண்டுள்ள நிபந்தனைகள் நிறைவேற்றப்படவேண்டும்.

5. வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனைப்பிரிவு அபிவிருத்திக்கு வரிவிதிக்கப்படின், அத்தகைய மீறல்களுக்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சியே (வெள்ளணைப்பட்டி ஊராட்சி உட்பட) பொறுப்பாகும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

6. உள்ளாட்சி சட்டத்தின்படி வரிவிதிக்கப்படுவதற்கு முன்னர் வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும், கூடுதலாகவும் மனைப்பிரிவு அபிவிருத்திக்கு இவ்வலுவலகத்தால் வழங்கப்பட்ட அதிகார பகிர்வின்படி நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57 ன்படி நடவடிக்கை ஏதுவாக எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

7. திட்டஅனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தின் நகலினை மனையிடத்தின் முன்புறத்தில் எந்நேரமும் பார்க்கத்தக்க வகையில் காட்சிக்கு (Display) வைக்கப்படவேண்டும்.

உறுப்பினர் செயலர் / இணை இயக்குநர்
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்,
கோயம்புத்தூர் - 18.

இணைப்பு

முத்திரையிட்ட வரைபடம் - 2
நிபந்தனை படிவம் - 2

பெறுநர்

தலைவர்,
வெள்ளணைப்பட்டி ஊராட்சி ,
அன்னூர் வட்டம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

நகல் மனுதாரர் (உள்ளாட்சி மூலமாக)
M/s. Value Dream and Land property,
34. Narajothipatty,
Ashok Nagar,
Salem -636004.

(213)

# சர்க்கார்சாமக்குளம் வட்டாரம், வெள்ளானைப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்

## முன்னிலை: திருமதி.R.கவிதா

**ந.க.எண். 003/2018** நாள்: 11.11.2020

பொருள்: கோயம்புத்தூர் மாவட்டம் - சர்க்கார்சாமக்குளம் ஊராட்சி ஒன்றியம் வெள்ளானைப்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம் க.ச.எண்: 194/4, 5, 6, 7, 8, 195/1A1, 1B1, 1C, 196/1A, 1B, 1C, 1D, 1E, 197/2, 3, 4 மற்றும் 197/5B-ல் உள்ள 10.28 ஏக்கர் பரப்பளவு கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது- அரசாங்க மதிப்பீடு செலுத்தப்பட்டது- ஊராட்சிக்கு அபிவிருத்தி மாற்ற நில உபயோக மாற்ற பயன்பாட்டு கட்டணம் செலுத்துதல் மற்றும் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக

பார்வை:
1. நகர் ஊரமைப்பு துறை இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்: 9381/2018/TCP நாள்:10.07.2020
2. உறுப்பினர் செயலர்(பொ), கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் கடித ந.க.எண்: 445/2018/உதிகு3, நாள்: 27.04.2018, 29.11.2019
3. மனுதாரர் M/S.Value Dream Land property, salem அவர்களின் நிலப்பயன்பாட்டு கட்டணம் செலுத்திய நாள்.19.10.2020 & 27.10.2020
4. ஊராட்சி தீர்மான எண். 89/2020

---

கோயம்புத்தூர் மாவட்டம் சர்க்கார்சாமக்குளம் வட்டாரம் வெள்ளானைப்பட்டி ஊராட்சியில் பார்வையில் காணும் கடிதத்தின் மூலம் மனைப்பிரிவுக்கான க.ச.எண். 194/4, 5, 6, 7, 8, 195/1A1, 1B1, 1C, 196/1A, 1B, 1C, 1D, 1E, 197/2, 3, 4 மற்றும் 197/5B-ல் உள்ள 10.28 ஏக்கர் பரப்பில் அரசு கணக்கில் 19.10.2020, 27.10.2020 ரூ.53350 /-(ரூபாய் ஐம்பத்தி மூன்றாயிரத்தி முன்னூற்றைம்பது மட்டும்) செலுத்தப்பட்டு சலான் பெறப்பட்டுள்ளது மற்றும் ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய பரிசீலனைக் கட்டணம் ரூ.10280/- செலுத்தபட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது

மேற்படி மனைப்பிரிவிற்கு விண்ணப்பதாரரால் தண்ணீர் வசதி, கழிவுநீர், கால்வாய், மின்சார இணைப்பு அமைக்கப்பட்டது. எனவே, மனைப்பரிவு அங்கீகார எண். ம.வ/கோஉதிகு. எண்.08/2020ன் படியும், தொழில்நுட்ப அனுமதியும் திட்ட அனுமதி எண்.187/2020ன்படியும் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. மனைப்பரிவில் அமைந்துள்ள மனைகள் நீர்நிலைகள் , அரசு புறம்போக்கு திறந்தவெளி ஒதுக்கீடு, அடுத்த நிலத்திற்கு வழியாக அமையும் காலிமனை , உத்தேச சாலை மற்றும் rail corridor , பொது பாதை மற்றும் நில உச்ச வரம்பு சட்டத்தின்படி உள்ள மனையிடம் அதிக மின்னழுத்த பாதை கீழ் அமைந்திருக்க கூடாது
2. மனைப்பிரிவு கட்டமைப்பு இம்மனைப்பிரிவில் அமையும் மனைகளின் உரிமையாளர் மின்சாரம் , குடிநீர், கழிவுநீர் வடிகால் அமைப்பு அமைக்காவிடில் அங்கீகாரம் இரத்து செய்யப்படுவதுடன் சட்டப்பூர்வமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
3. இம்மனைப்பிரிவின் நிலங்கள் தொடர்பாக மனைப்பிரிவு உரிமையாளர் சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்று சமர்ப்பித்த வில்லங்க சான்றின் சரித்தன்மையை உறுப்பினர் செயலர்(பொறுப்பு), கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்கள் உறுதி செய்து வழங்கிய செயல்முறை ஆணையின் அடிப்படையில் மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டது. இதில் ஏதேனும் தவறுகள் அல்லது ஆவணங்களின் சரித்தன்மை குறித்து புகார்கள் கண்டறியப்படின் ஒட்டு மொத்த மனைப்பிரிவின் அங்கீகாரம் ரத்து செய்யப்படுவதுடன் சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தலைவர்

வெள்ளானைப்பட்டி ஊராட்சி

11/11/2010

பெறுநர்:

M/S.Value Dream Land property ,

34, Narajothipatty

Ashok nagar,

Salem-636004

நகல்:

1. உறுப்பினர் செயலர்(பொ), கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்,
   டாக்டர் நஞ்சப்பா சாலை, கோயம்புத்தூர்.
2. சார் பதிவாளர் அலுவலகம், கணபதி.